**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 91/2023
Prosecution side witness for P.W.5

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. துரைராஜ்** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **10.04.2026**

Accused produced.

**முதல் விசாரணை:–**

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம், வைரவம் புதுக்குடியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன அரிராமனை தெரியும். அவர் எனது ஊர்க்காரர். 29.03.2016 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் நானும், எங்கள் ஊரை சேர்ந்த தங்கபாண்டியும், பொத்தகாலன்விளைக்கு சென்றிருந்தோம். அங்கு கொலை நடந்த இடத்தை சென்று பார்க்க போனோம். அங்கு பஞ்சாயத்து போர்டு இடத்திற்கு தென்புறம் திருகல்யாண மாதா கோவிலுக்கு சொந்தமான இடத்தில் வாட்டர் டேங்க்கிற்கு தென்புறம் அரிராமன் கழுத்து அறுக்கப்பட்ட நிலையில் இறந்துகிடந்தார். அப்போது தட்டார்மடம் காவல்நிலையத்திலிருந்து இன்ஸ்பெக்டர் மற்றும் போலீசார் வந்திருந்தார்கள். வந்தவர்கள் அந்த இடத்தை சுற்றி பார்த்து எழுதிக்கொண்டார்கள். அவ்வாறு ஆய்வாளர் எழுதியதில் நானும்,

தங்கபாண்டியும் கையெழுத்து செய்து கொடுத்தோம். அந்த பார்வைமகசர் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ−2** ஆகும். அதில் நான் முதலாவதாகவும், இரண்டாவதாக தங்கபாண்டியும் கையெழுத்து செய்துகொடுத்துள்ளார். பின்னர் அந்த இடத்தில் ஒரு மணிநேரம் கழித்து அரிராமன் வெட்டுப்பட்டத்தில் காணப்பட்ட இரத்தம்பட்ட மண்ணையும், இரத்தம்படாத மண் கொஞ்சமும் எடுத்தார்கள். அதையும் எழுதி அத்தாட்சி தயார் செய்துகொண்டார்கள். அது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ−3** ஆகும். அதில் முதலாவதாக நானும், இரண்டாவதாக தங்கபாண்டியும் கையெழுத்து செய்து கொடுத்துள்ளோம். அரிராமன் இறந்துகிடந்த அன்று புளூ கலர் டிசர்ட்டும், மஞ்சள் கலர் சாரமும் அணிந்திருந்தார். அவற்றை நீதிமன்றத்தில் காண்பித்தால் அடையாளம் காட்ட முடியும். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் இரத்தம்பட்ட மண் கொஞ்சம்(சொத்துப்பட்டியல் வரிசை எண்.1ல் உள்ளது) அது **அ.சா.பொ.5** ஆகும். இரத்தம்படாத மண் கொஞ்சம்(சொத்துப்பட்டியல் வரிசை எண்.2ல் உள்ளது) அது **அ.சா.பொ.6** ஆகும். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அரிராமன் அணிந்திருந்த ஆடைகள் அ.சா.பொ.1 முதல் 3 ஆக குறியீடு செய்யப்பட்டவைகள்தான். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்குவிசாரணை (எதிரிதரப்பில்)</u>

அ.சா.1 ஜானகியும், வழக்கில் இறந்துபோன அரிராமனும் எனக்கு சொந்தக்காரர்கள் என்றால் சொந்தம், ஒரே ஊர்க்காரர்கள். நாங்கள் 3 பேரும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பார்வைமகசரில் நான் கையெழுத்து போட்டதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் கையொப்பம் செய்யும்போது எழுதப்படாத வெள்ளை தாளில்தான் போலீசார் கையொப்பம்

வாங்கினார்கள் என்றால் இல்லை. நான் கையெழுத்துப்போட்ட பார்வைமகசரில் பார்வைமகசர் தயார் செய்யப்பட்ட நேரத்தை திருத்தம் செய்து அதற்கு மேலேயே 9.45 மணி என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பார்வைமகசரில் வடக்கில் என்ற வார்த்தையை இடைசெறுகலாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. பார்வைமகசரில் சம்பவ இடமானது மக்கள் அதிக நடமாட்டம் உள்ள இடம் என்றால் சரிதான். நான் சொல்லும் இடத்தில் எங்கள் இனத்தை சேர்ந்தவர்களை தவிர மற்ற இனத்தை சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள் என்றால் சரிதான். மங்கள்ராஜ், மாமரதோட்டம் மரிய பங்குராஜ், ராஜேந்திரநாடார் ஆகியோர்கள் எங்கள் இனத்தை சேர்ந்தவர்கள் கிடையாது என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்தது எல்லாமே காவல்நிலையத்தில் வைத்துதான் போட்டுக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. என்னுடன் கையெழுத்துபோட்ட சாட்சி தங்கபாண்டி என்னுடைய உறவினர் என்றால் சரிதான். பிரேதத்தை நான் பார்வையிடவில்லை என்றால் பார்த்தேன். பிரேதத்தை எங்கு வைத்து பார்த்தேன் என்றால் வெட்டுப்பட்ட இடத்தில் வைத்து பார்த்தேன். அத்தாட்சியில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. அத்தாட்சியில் கைப்பற்றியதாக சொல்லப்படும் பொருட்கள் என்ன என்ன என்று விசேச குறிப்புகள் எதுவும் இல்லை என்றால் தெரியவில்லை. அத்தாட்சியில் கையெழுத்து செய்தது காவல்நிலையத்தில் வைத்துதான் போட்டுக்கொடுத்தேன் என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு நான் போவதற்கு முன்பாகவே போலீசார் அங்கு இருந்தார்கள் என்றால் சரிதான். நான் சொன்ன நாள், நேரத்தில் போலீசார் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றாலும், பார்வைமகசர், வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.1

எனக்கு சொந்தக்காரர் என்பதாலும், போலீசார் கேட்டுக்கொண்டபடி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை:–</u>** இல்லை

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District & Sessions Judge,
Thoothukudi.